# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் – 93 ஆடி – புரட்டாசி 2025 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=


## வாழ்த்துவோம் செபிப்போம்



இறைவனின் குரலுக்கு செவிகொடுத்து இறைபணிக்கென அழைப்புப் பெற்று இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நம் ஆயர் அதிவணக்கத்திற்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் பணி மென்மேலும் உயரவும், அவருக்கு இறைவன் தாமே நல்ல உடல் உள ஆன்மீகப் பலத்தை கொடுக்க தொடர்ந்து மன்றாடுவோம்.

*Happy 10th Years Anniversary*

BISHOP
RT. REV. DR. C.NOEL EMMANUEL

### குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா காணும்



### அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக்

இறையழைப்பிற்கு 'ஆமென்' என்று பதிலளித்து 25 ஆண்டுகள் இறைவனுக்கு அர்ப்பணிப்போடு வாழ்ந்து இறைபணியாற்றுகின்ற புனித மரியாள் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக் அடிகளாரின் பணி இனிவரும் காலங்களிலும் இறைவனின் சித்தப்படி தொடர செபித்து வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றது திருகோணமலை மறைமாவட்டம்.

## இறைவனோடு வான்வீட்டில் துயில் கொள்ளும் அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளார்



திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை திருத்தலப் பங்கின் மைந்தனும், சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்குத்தந்தையும், மறைக்கல்வி நடுநிலை இயக்குனருமான அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளார் 02.08.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். 04.08.2025 அன்று காலை 9.30 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவிகள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்திருந்த குருக்கள், இருபால் துறவிகள் இறைமக்கள் அனைவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்.





"தந்தையே உம் திருமகனோடு அவருடைய மரணத்தில் ஒன்றாக இணைக்கப்பட்ட இவர் உயிர்ப்பிலும் அவரைப் போலவே இருக்கச் செய்தருளும்.



## பத்திரிகை ஆசிரியரின் பேனா...

தனது ஆயர்த்துவ திருநிலைப்படுத்தலின் 10வது அகவையில் கால் பதித்து (25.07.2015) வெற்றிநடை போடும் எமது மறைமாநில ஆயர் கலாநிதி பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு எனது எழுது கோலையும், காகித ஓலைகளையும் சற்று உற்சாகத்துடனேயே சரிபார்த்து நிற்கின்றேன்.

புனித / பாதரே பியோ அவர்கள் கேட்டுப்பெற்றுக் கொண்ட Stigma என்னும் புதுமைமிகு காயங்கள் கொண்ட திருவிழாவும், இயேசு 07 பேய்களை ஓட்டிய புனித மகதலா மரியாவின் (திருவிழா) துணிச்சல்மிகு செயற்பாடுகளும் கடவுளின் தாயை ஈன்றெடுத்து உலகிற்குத் தந்த புனித சுவக்கின் அன்னம்மாள் அவர்களின் புதுமைகளையும் துணிச்சல்களையும் வாசித்தறியும் போது உடல் சிலிர்க்கிறது. ஏன் புனித இக்னேசியஸ் லொயல்லா கற்றுத்தரும் விசுவாச பேராண்மையையும் என்னவென்று சொல்வது. அதுமட்டுமா நாட்டில் நடந்தேறும் அதிர்ச்சியூட்டும் திட்டங்களில் எமது கிழக்கின் உதயத்தின் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அடிகளுக்கு புதிய அரசாங்கம் கொடுத்துள்ள அங்கீகாரத்தையும் பாராட்டாமல் தான் இருக்க முடியுமா?

அந்த வகையிலே பார்க்கும் போது; எமது வியாகுலத் தாயார் எம் ஆண்டவரை உதரத்திலே தாங்கி, நெஞ்சினிலே ஏந்தி, கொல்கொத்தா மலை வரை துயரம் சுமந்து, தம் மக்களாக எம்மை ஏற்று தூய ஆவியின் கொடைகளும் கனிகளும் திருத்தூதர் பெற்றுக்கொள்ளும் வேளையில் அவர்களோடு உடன் இருந்த பின் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பெற்ற பெருவிழாவினை ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி கொண்டாடி மகிழ்ந்தோம். தனையனுக்கு கிடைக்கும் மகுடத்தின் மாட்சிமையில் தாய்க்கும் பங்கிருப்பது போல் தாய்க்குக் கிடைக்கும் விண்ணகம் என்னும் பேரின்ப சம்பாவனையில் பிள்ளைகளுக்கும் பங்கு கிடைக்கிறது என்பதில் நாமும் மகிழ்ச்சி அடைவோம்.

எனவே, விண்ணக மண்ணக அரசியாம் எம் தாய் மரியாளிடம் எமக்காகவும், எமது நாட்டிற்காகவும், பரிந்து பேச மன்றாடுவோம். எங்கும் புரையோடிப்போய் இருக்கும் இலஞ்சம், போதைப்பொருள் பாவனை, துப்பாக்கிக் கலாச்சாரம், அரசியல் பழிவாங்கல்கள் என்பன நீங்கி புதிய சிந்தனைகளை உள்வாங்கியதாக, ஆரோக்கியமான கல்விமுறைமையை தாங்கியதாக ஜொலிக்கட்டும் எமது நாடு. எல்லோரும் அமைதியோடும் தோழமையோடும் பயணிப்போம். ஏனெனில் அன்னை மரியாவின் பரிந்துரை நம்மோடு கூட பயணிப்பதாக.

**அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட்**
**ஆசிரியர்**
**திருமலைத்தீபம்**

## ஆயரின் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

இயேசுவில் நிறைவான வாழ்த்துக்கள்! எமது கிறிஸ்தவ வாழ்வு பல திட்டங்களோடும், முயற்சிகளோடும், நிறைவோடும் பயணித்தாலும் காலத்துக்குக் காலம் நாம் எதிர்கொள்ளும் சவால்கள், தோல்விகள், இழப்புக்கள் எம்மைப் பலவீனப்படுத்தலாம் அல்லது சோர்வுறச் செய்யலாம். மறைமாவட்டம் அல்லது தனிநபர் ஆன்மீக ரீதியில் வளர்ந்து இறைவனோடு நெருங்கி வரும்போது முதலில் பொறாமைப்பட்டு எதிராக சூழ்ச்சி செய்வது அலகையே.

அமரர் அருட்தந்தை றொஹான் பேணார்ட் அடிகளின் மறைவு பலருக்கும் சோகத்தைத் தந்தது. இவ்வேளையில் அருட்தந்தை றொஹானின் இரு சகோதரர்கள் சகோதரிக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அருட்தந்தை றொஹான் 2024 இல் தனது குருத்துவ வாழ்வின் 25 வருடங்களை நிறைவு செய்தார். இக்காலத்தில் இவர் பங்குகளில் பங்குத் தந்தையாக, மறைமாவட்ட ரீதியில் ஆணைக்குழுக்களின் இயக்குனராக பணியாற்றியிருக்கின்றார். விசேடமாக மறைமாவட்ட சமூகத் தொடர்புகள் ஆணைக்குழுவின் இயக்குனராக இருந்த காலத்தில் அலையோசை எனும் சஞ்சிகையைத் தொடங்கி வைத்தார். பீடப்பணியாளர்களுக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் அவர்களுக்கான ஒன்றுகூடல்கள், தேவ அழைத்தலை ஊக்குவித்தல் போன்றவற்றில் அதிக அக்கறையோடு செயல்பட்டார். குடும்ப அப்போஸ்தலத்துவ பணிக்குப் பொறுப்பாக இருந்த வேளைகளில் திருமண ஆயத்த வகுப்புகளை முறையாக ஆயத்தம் செய்தும் இவர்களுக்கான சிறு சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தார்.

அருட்தந்தை றொஹான் கலையார்வம் கொண்டவர். நாடகத்துறையில் சிறு வயதிலிருந்தே அதிக நாட்டம் கொண்டிருந்தார். இதன் உச்ச வெளிப்பாடாக இவர் மேடையேற்றிய திருப்பாடுகளின் காட்சி நாடகங்கள் பல. மக்கள் தவக்காலத்தில் உருக்கமாக தம் பக்தியை வளர்க்க இது உதவியாக இருந்தது. அதேபோல தவக்காலத்திலும் மக்கள் அர்த்தமுள்ள சிலுவைப் பாதைத் தியானத்தில் ஈடுபட உதவியாக தான் பணிசெய்த பங்குகளில் அதன் சூழமைவிற்கு ஏற்ப சிறு குன்றுகளில் அல்லது மலைகளில் சிலுவைப்பாதை ஸ்தலங்களை அமைப்பது அவருக்கு விருப்பமான செயலாக இருந்துள்ளது. அன்பியங்களுக்குப் பொறுப்பாக இருந்த வேளையிலும் எமது மறைமாவட்டம் மட்டுமல்ல இலங்கை முழுவதும் பயனடையக்கூடிய விதத்தில் சிறப்பான கைநூல் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

அருட்தந்தை றொஹான் பேணார்ட் அடிகளின் மரணம் எமக்கு பெரும் இழப்பாக இருந்தாலும் அவர் விட்டுச் சென்ற நல்வாழ்வை வாழ்ந்துகாட்டுவதே அவருக்கு நாம் கூறும் நன்றியாகும்.

இக்காலங்களில் இலங்கைக்கு இரு கர்தினால்கள் வருகை தந்திருக்கின்றார்கள். கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் அவர்களின் அழைப்பின்பேரில் இவர்கள் வருகை தந்தாலும் பொதுநிலையினர், குருக்கள், துறவியரையும் சந்திக்கின்றார்கள். மாரியோ கர்தினால் கிறேக் இலங்கைக்கு கடந்த மாதம் வருகை தந்தார். அண்மையில் தொடங்கப்பட்ட ஆயர்கள் மாமன்றத்தின் பொதுச் செயலாளராக செயல்படும் கர்தினால் கிறேக் தேசிய மட்டத்தில் குருக்கள் துறவியர் பொதுநிலையினருக்கு கூட்டொருங்கியக்கத் திருஅவை பற்றிய தெளிவுகளைத் தந்தார். ஆகஸ்ட் மாதம் இலங்கை வந்த ஆத்தர் கர்தினால் ரோச் அவர்கள் திருஅவையின் திருவழிபாட்டு ஆணைக்குழுவின் தலைவராகவும் செயல்படுகின்றார். இவரும் தேசிய மட்டத்தில் திருவழிபாடு பற்றிய தெளிவை குருக்கள், துறவிகள், பொதுநிலையினருக்குத் தந்துள்ளார். விசேடமாக வட - கிழக்கு மாகாணங்களிலுள்ள குருக்களுக்கு செப்டம்பர் 2ஆம் திகதி மடு திருப்பதியில் உரையாற்றியுள்ளார். இவர்களது வருகை, சந்திப்பு இலங்கைத் திருஅவைக்கு பயனுள்ளதாக அமைய ஆசிப்போம்.

இம்மாதம் 15ஆம் நாள் நாம் மரியன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவை சிறப்பித்தோம். இது புனித மரியாள் பேராலயப் பெரு விழாவாகும். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மறைமாவட்ட பேராலயம், மற்றும் மடு திருப்பதியின் பெருவிழாவுமாகும். மரியன்னையின் அழைப்பு பணி அவர் விட்டுச் சென்ற நற்பண்புகள் திருஅவைக்கு இன்றியமையாததாகும். இன்றும் மரியன்னை எமக்காகப் பரிந்து பேசுகின்றார். நல்ல அன்னையாக அவர் எம்மீது வைத்திருக்கும் அன்பும் பாசமும் நாம் பெற்ற ஆசீராகும். அவரது நற்பண்புகளை நாமும் வாழ்ந்து காட்டுவோம்.

**இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக!**
**கிறிஸ்துவில்,**

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.**

## மருத மடு அன்னை திருத்தலத்தை நோக்கிய பாத யாத்திரை

புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத்தில் (பள்ளத்தோட்டம்) இருந்து 24.06.2025 அன்று மாலை 6 மணியளவில் ஆரம்பமாகிய பாத யாத்திரை 30.6.2025அன்று மடுத்திருத்தலத்தை சென்றடைந்தது. அருட்பணி. ஜுட் ஜோன்சன் அடிகளாரின் ஆன்மீக ஆயத்தத்துடனும், வழிகாட்டுதலுடனும் ஆரம்பமாகிய இவ் யாத்திரையானது தொடர்ந்து மூன்று வருடங்களாக மடுத்திருத்தலத்தை நோக்கிய பாத யாத்திரையாக பள்ளத்தோட்ட பங்கு மக்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வருடம் யூபிலி ஆண்டின் அருட்பணி. சகாய ஜோன்பிள்ளை அடிகளாரும் பாத யாத்திரையில் பயணித்து, அனைத்து யாத்திரியர்களையும்



ஆன்மீக வழிகாட்டலுடன் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றார். இவ்யாத்திரையில் குவாடலூப்பே, பள்ளத்தோட்டம், உவர்மலை, இறைஇரக்கம், செல்வநாயகபுரம், இலிங்கநகர் ஆகிய பங்குகளில் இருந்து யாத்திரியர்கள் இணைந்து கொண்டனர்.

தகவல் - பங்கு மக்கள்

# அருட்பணி றொஹான் பேணார்ட் அடிகளார் ஓர் பார்வை



திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள அகிலம் போற்றும் அன்னையாம் புனித குவாடலுாப்பே அன்னை திருத்தலப்பங்கு மண்ணின் மைந்தன் அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட் அடிகளார் 02.08.2025 அன்று இறைவனிடம் சேர்ந்து விட்டார். இவர் திரு திருமதி அல்பட் அருளானந்தம் எலாயஸ் தம்பதியினரின் இரண்டாவது மகனாவார்.

இவர் 07.03.1972 ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தரம் 1 – 10 வரை திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலத்தில் கற்றார். பின் குருத்துவ அழைத்தலைப் பெற்று மட்டுநகர் புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் இணைந்து க.பொ.த (சாதாரணம்) உயர்தரக் கல்வியினையும் புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். 1992 – 1999 வரை அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் இணைந்து மெய்யியல் இறையியல் கற்கை நெறியை முடித்தபின் 07.09.1999 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் மட்டுநகர் வாழைச்சேனை புனித திரேசா ஆலயத்திலும், திருக்கோயில் புனித சூசையப்பர் ஆலயத்திலும் பணியாற்றியுள்ளார். அத்துடன் இடம் பெயர்ந்த அலிகம்மை தேவகிராம மக்கள் மத்தியிலும் பணியாற்றியதுடன் கூளாவடி, மாமாங்க பங்குகளிலும் பணியாற்றி மட்டுநகர் சமூகத்தொடர்பு நிலைய இயக்குனராக பணியாற்றிய காலப்பகுதியில் தொண்டன் பத்திரிகையை புதுப்பொலிவுடன் சிறப்பாக நடாத்தியுள்ளார். பின்னர் தொடர்பாடல் கல்வியில் உயர்கல்வியைக் கற்பதற்காக உரோமை திருச்சிலுவை பல்கலைக்கழகத்தில் இணைந்து முதுமானிப்பட்டத்தினை 2011 – 2014 ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்தார். அவர் தனது உயர்கல்வியைப் பூர்த்தி செய்தபின் திருகோணமலை பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்திலும், சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்திலும் பங்குத்தந்தையாகக் கடமையேற்று பல ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார். அவர் ஆற்றிய பணிகளாவன அன்பிய செயற்பாட்டை புதுப்பொலிவுடன் நடாத்தியுள்ளார். பல பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, பொதுநிலையினர் அமைப்பு ஆணைக்குழு, இளைஞர் ஒன்றிய ஆணைக் குழுவின் இயக்குனராகவும், பீடப்பணியாளர், சமூகத் தொடர்பு ஆணைக்குழு போன்றவற்றின் இயக்குனராகக் கடமையேற்று உரோமை நகரில் பெற்ற முகாமைத்துவ தொலைத் தொடர்பு உயர் கல்வியில் பெற்ற பயிற்சியினால் “அலை ஓசை, திருமலைத்தீபம், இனிமை - இல்லம்” போன்ற பத்திரிகைகளை வெளியிட்டமை விசேட அம்சமாகும். அத்துடன் இயல், இசை, நாடகத் -துறையில் பாண்டித்தியம் பெற்ற இவர் பாஸ்கா நாடகங்களை மேடையேற்றுவதுடன், புனித யாத்திரிகைகளில் இறைமக்களை ஈடுபடுத்தி இறை பிரசன்னத்தை அவர்களின் உள்ளத்தில் பதிக்க ஆர்வம் காட்டியமையுடன் மறைக்கல்வியில் விவிலிய வினாவிடைப் போட்டிகள், பாடல் போட்டிகள் நடாத்தி இளம் சந்ததியினரின் உள்ளத்தில் மறையறிவைப் பதிக்க முயன்றதும் சிறப்பு அம்சமாகும்.



இவ்வாறான அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக நடாத்த ஆற்றல் வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், இதற்கு அன்னை மரியாயின் பரிந்துரையுமே காரணமாகும். அவரது பணிக்காலத்தில் பல கசப்பான நிகழ்வுகளான தொற்றுநோய்களின் ஆதிக்கம், இனக்கலவரம், வன்செயல்கள், காலநிலை மாற்றம், பெற்றோரின் இழப்புக்கள் போன்றன ஏற்பட்ட போதும் பணிவாழ்வை சிறப்பாக 26 வருடங்கள் நடாத்த உதவிய இறைவனுக்கு நன்றியும், உறுதுணையாகவும், பக்கபலமுமாக விளங்கிய மதிப்பிற்குரிய எமது ஆயர்களான அதிவணக்கத்திற்குரிய கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கும், அதிவணக்கத்திற்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களுக்கும் காலஞ்சென்ற மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய பொன்னையா யோசப் ஆண்டகை அவர்களுக்கும் நன்றிகள்.

எனவே கடந்து வந்த பாதையை நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் அன்னாரது இழப்பு எமக்கும் எமது மறைமாவட்டத்திற்கும், சமூகத்திற்கும், உறவினர்களுக்கும் பெரும் இழப்பாகவே கருதப்படுகின்றது. எனவே அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம். எனது பங்கின் முதற்குருவாக அழைப்புப் பெற்ற அருட்தந்தையின் இழப்பு எமது பங்கிற்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

தகவல் - K. ஜசிந்தா குவாடலூப்பே பங்கு.

## படித்ததில் பிடித்தது

### தைரியம் என்பது தன்னம்பிக்கையின் மறுபெயர்



ஒரு ஊரில் அரசன் ஒருவன் இருந்தார்.

அதிகாலையில் எழுந்தவுடன் சூரிய உதயத்தைப் பார்ப்பது அவரது வழக்கம்.

வழக்கம் போல் அன்றும் சாளரத்தைத் திறந்த அரசருக்கு ஏமாற்றம்!

சூரிய உதயத்திற்குப் பதில் அவர் கண்களில் ஒரு பிச்சைக்காரன் தான் தோன்றினான். போயும் போயும் இவன் முகத்தில் தான் விழிப்பதா என்று கடும் வெறுப்புடன் திரும்பினார் அரசர். திரும்பிய வேகத்தில் சுவற்றில் அவரது தலை அடிபட்டு இரத்தம் கொட்டியது. வலியோ பொறுக்க முடியவில்லை அத்துடன் கோபம் வேறு பொங்கியது…

பிச்சைக்காரனை இழுத்து வருமாறு கட்டளையிட்டார். காவலர்கள் அவனை இழுத்துக் கொண்டு வந்து மன்னர் முன்னே நிறுத்தினர். அரச சபை கூடியது தனது காயத்துக்கு காரணமாக இருந்த அந்த பிச்சைக்காரனை தூக்கிலிடுமாறு தண்டனை கொடுத்தார்.

பிச்சைக்காரன் கலங்கவில்லை கலகலவெனச் சிரிக்கத் தொடங்கினான். சபையில் இருந்தவர்கள் திகைப்புடன் விழித்தனர்.

அரசனுக்கோ கோபம் கட்டுக்கடங்காமல் போய் விட்டது… பைத்தியக்காரனே! எதற்குச் சிரிக்கிறாய் என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

அரசே! என் முகத்தில் விழித்ததால் உங்கள் தலையில் சிறு காயம் மட்டும் தான் ஏற்பட்டது. ஆனால் உங்கள் முகத்தில் நான் விழித்ததால், என் தலையே போகப் போகிறதே… அதை நினைத்தேன் சிரித்தேன் என்றான். மன்னன் தலை தானாகவே கவிழ்ந்து விட்டது. தவறை உணர்ந்தவன் தண்டனையை ரத்துசெய்து பிச்சைக்காரனை விடுவித்தான்.

**தைரியம் என்பது தன்னம்பிக்கையின் மறுபெயர். அது இல்லையென்றால், சமயத்தில் உயிரைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய் விடும்.**

# திருகோணமலை மறைமாவட்டத்தில் அருளடையாள சிறப்புக்கொண்டாட்டம்



இறை இரக்க திருத்தலம் - அலஸ்தோட்டம்



புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை



புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் - கும்புறுபிட்டி



புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு



புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர்



புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி




## மகிழ்ச்சி தரும் மாற்றம்

**இறையாசீருடன்**

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

மலையிலிருந்து மிக உயரமாக வளர்ந்த மரத்தில் ஒரு பறவை முட்டை இடுவதற்காக கூடு கட்டியது. கூடு கட்டிவிட்டு இரை தேடச் சென்ற நேரம் ஒரு குரங்கு வந்து அந்தக் கூட்டை பிய்த்து எறிந்தது. அந்தக் கூடு காற்றில் பறந்து கீழே விழும் காட்சி அந்தக் குரங்கிற்கு மகிழ்ச்சியளித்தது போலும், அது அந்தக் காட்சியைக் கண்டு குதூகலமாக குதித்துக் கொண்டாடியது.

இதைக் கண்ட பறவை மீண்டும் தன் கூட்டைக் கட்டியது. ஆனால் இந்த முறை இன்னும் அதிக உயரத்தில் கட்டியது. மீண்டும் குரங்கு சென்று தன் சேட்டையைக் காட்டியது. மூன்றாம் முறை அந்தக் கூட்டை உச்சி நுனியில் உள்ள கிளையில் கட்டியது. இப்போது குரங்கால் அந்த சிறிய கிளைக்கு ஏற முடியவில்லை, அது தன் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மனிதன் அந்தப் பறவையிடம், "ஏன் நீ அந்தக் குரங்கிற்கு ஒரு பாடம் புகட்ட நினைக்கவில்லை, தொடர்ந்து அந்தக் குரங்கிடமிருந்து விலகிச் செல்ல மட்டுமே நினைத்தாயே!" என்று கேட்க, பறவை சொன்னதாம், நான் மனிதனல்ல, பறவை! நடக்கும் நிகழ்வுகளிலிருந்து தாங்கள் பாடம் கற்றுக் கொள்வதற்குப் பதிலாக மனிதர்கள், பிறருக்கு அது தேவையா இல்லையா என்று கூடப் பார்க்காமல் பிறருக்குப் பாடம் புகட்டுவதையே தங்கள் முக்கியப் பணியாக நினைத்துக் கொண்டிருக் கின்றார்கள். ஆனால் நான், நடந்த நிகழ்வுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள நினைத்தேனே தவிர கற்றுக் கொடுக்க அல்ல! என்று சொன்னதாம்.

இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தாலும், பல உண்மைகள் இதில் அடங்கியுள்ளன. சமுதாயத்தில் நல்ல பல மாற்றங்கள் வரவேண்டும் என்பதே அனைவரின் ஆசையாகும். அதற்காக பிறரை நாம் மாற்ற நினைத்தால் அது மாற்றத்தை அல்ல, மனத்தாங்கல்களையே உருவாக்குகின்றது. ஆனால் நம்மை நாமே மாற்றிக் கொள்ளும் போது அது ஒரு நிம்மதியையும் நிறைவையும் தருகின்றது. ஊர் வாயை மூடஉலைமூடி இல்லை என்பார்கள். பிறரைத் திருத்த நினைப்பதை விட நம்மைத் திருத்திக் கொள்ள விழைவோம். இதுவே மகிழ்ச்சி தரும் மாற்றமாகும்.



# தூய பவுலோடு அழைப்பை அர்த்தமாக்குவோம்

அருட்பணி – செபஸ்தியான், கப்புச்சின்

மனித வாழ்வின் மிக ஆழமான கேள்விகளில் ஒன்று நான் ஏன் இங்கே இருக்கின்றேன்? என் வாழ்வின் நோக்கம் என்ன? என்பது தான்.

இந்தக் கேள்விக்கான தேடலில் தான் நம் ஒவ்வொருவருக்குமான தனித்துவமான அழைப்பை நாம் கண்டடைகின்றோம். அழைப்பு என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட பணிக்கு மட்டுமானதல்ல அது நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு செயலிலும் கடவுள் நம்மை நோக்கி விடுக்கும் ஒரு அழைப்பாகும்.

கிறிஸ்தவ வரலாற்றில் அழைப்பை முழுமையாய் உணர்ந்து அதற்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்த மகத்தான புனிதர்களில் தூய பவுலடியார் முதன்மையானவர். தமஸ்குசாலையில் அவர் பெற்ற அந்த அருள் நிறைந்த சந்திப்பிலிருந்து அவர் தனது அழைப்பின் ஆழத்தை படிப்படியாக உணர்ந்து அதை உலகிற்கு வெளிப்படுத்தும் வலிமையான கருவியாக மாறினார். அவரது வாழ்க்கைப் பயணம், கடிதங்கள் மற்றும் போதனைகள் யாவும் நம் ஒவ்வொருவருக்கும் நம் அழைப்பை எவ்வாறு புரிந்து கொள்வது சவால்களை எதிர்கொள்வது மற்றும் அதில் நிலைத்திருப்பது எப்படி என்பதை அர்த்தமாக்குவதற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன.


ஆகவே இக்கட்டுரையில் நாம் "தூய பவுலோடு அழைப்பை அர்த்தமாக்குவோம்" என்ற தலைப்பின் கீழ் புனித பவுலின் வாழ்வையும் போதனைகளையும் தியானிப்பதன் மூலம் நம் தனிப்பட்ட அழைப்பை இன்னும் ஆழமாகப் புரிந்து கொண்டு அதை நம் வாழ்வில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதை ஆராய்வோம். அவரது எடுத்துக்காட்டான வாழ்வு நமது அழைப்புப் பயணத்தில் நமக்கு உத்வேகமும் தெளிவும் தரும்.

அழைத்தவரால் எப்பொழுதும் அழைப்பு மேன்மை மிக்கதாய் மாறுகிறது. இது எல்லாரும் அறிந்த உண்மை ஆனால் அழைக்கப்பட்டவர்களால். அழைப்பு மேன்மைமிக்கதாய் திகழ்கின்றதா? கொண்டாடப்படுகின்றதா? மாற்றப்படுகின்றதா? என்பது இன்று நம் எல்லோருக்கும் முன்பாக வைக்கப்படுகின்ற ஒரு கேள்வியாகும் தூய பவுலின் பார்வையில் அழைப்பு மேன்மை மிக்கதாய் மாற்றப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இதன் மூலம் நாம் சிந்திப்போம்.

## உரிமைகள் – கடமைகள்

நவீன உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கடமைகளை விட உரிமைகளைப் பற்றியே அதிகம் பேசுகின்றோம். கவலைப்படுகின்றோம். ஏனென்றால் உரிமை என்பது சுயநலம் சார்ந்தது பல தருணங்களில் உரிமை நம்முடைய ஆடம்பரத்தை சொகுசை மையப்படுத்தியதாக அமைகின்றது. ஆனால் கடமையோ பிறர் நலம் சார்ந்ததாகவும் மற்றவர்களுடைய அத்தியாவசிய அடிப்படை தேவைகளை மையப்படுத்தியதாகவும் அமைகின்றது.

இன்று அழைக்கப்பட்ட பலரும் தான் விரும்புவதை எல்லாம் படித்து பட்டம் பெற உரிமை இருக்கின்றது. பதவி வகிக்க உரிமை இருக்கின்றது. விரும்புவதை எல்லாம் சுதந்திரமாய் செய்ய உரிமை இருக்கின்றது. தூக்கி வைத்துக் கொண்டாடப்பட உரிமை இருக்கின்றது என்று கூறுவதை இன்று நாம் அதிகமாக காண முடிகின்றது. ஆனால் தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் ஒன்பதாம் அதிகாரத்தில் திருத்தூதரின் உரிமைகளும் கடமைகளும் என்ற தலைப்பில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறும் செய்தி இதுதான். நற்செய்தி அறிவிப்பவருக்கு அடிப்படை தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து உரிமையும் இருக்கின்றது ஆனால் ஒருவேளை அதைப் பெறுவதற்கான வாய்ப்பு



கிடைக்கவில்லை என்றால் அது ஒருபோதும் நற்செய்திப் பணிக்கு தடையாக அமைந்து விடக்கூடாது என்பதை தெளிவுபடுத்துகின்றார். "அடிப்படை உரிமைகள் சந்திக்கப்பட்டால் சந்தோசப்படுவோம் சந்திக்கப்படாவிட்டாலும் சந்தோசமாய் பணி ஆற்றுவோம்" என்பது பவுல் அடியாரின் நிலைப்பாடு இதையே 1 கொரிந்தியர் 9:18இல் வாசிக்கின்றோம். அப்படியானால் எனக்கு கைமாறு என்ன? உங்களுக்கு எச்செலவுமின்றி நற்செய்தியை அறிவிப்பதில் உள்ள மனநிறைவே அக்கைமாறு.

கடமை என்பது பெறுவதற்கு உரிமை என்பது இல்லாதவர்களுக்கு கொடுப்பதற்கு பொறுப்பு இல்லாதவர்கள் செய்கின்ற உதவி என்று சொல்லலாம். கொரிந்தியர் 9:19 முதல் தூய பவுல் அருமையாக சொல்லுகிறார். "நான் யாருக்கும் அடிமையாய் இல்லாது இருந்தும் பலரை கிறிஸ்துவிடம் கொண்டுவர எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன். யூதர்களை கிறிஸ்துவிடம் கொண்டுவர யூதருக்கு யூதரைப் போல் ஆனேன்"

இன்று நாம் யாருக்கு கடமை ஆற்ற விரும்புகின்றோம்? என்னுடைய கடமையை நிறைவேற்ற என்னுடைய சொந்த விருப்பங்களை விட்டுக் கொடுக்க தயாராக இருக்கின்றேனா? எதிர்பார்ப்பு இல்லாமல் கடமைகளை நிறைவேற்ற தயாராய் இருக்கின்றேனா?

தங்கள் உடையின் மடிப்பு கலையாமல் பணியாற்ற விரும்புகின்றவர்களே இன்று அதிகம். தங்களுக்கென ஒரு திட்டம் வகுத்து அதற்காக மட்டுமே தங்களை தயாரித்து ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு பணியாற்ற விரும்பும் பணியாளர்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்து வருகின்றது. தங்களுடைய கருத்துகளோடு ஒத்து வருகின்ற அவர்ளோடு மட்டுமே இணைந்து பணியாற்ற விரும்புகின்றவர்கள் பலர் சற்று சிந்திப்போம்.

யாருடைய பணிக்கு இன்று எனது முன்னுரிமை? அந்தப் பணிக்காக நான் இழக்க துணிந்து இருப்பவை எவை?

## உவப்பும் – முணுமுணுப்பும்

திருத்தூதர் பணிகள் 14:19-20இல் தூய பவுல் கல்லெறிக்கு உள்ளாக்கப்படுகிறார். கல் எறிந்தவர்கள் அவர் இறந்துவிட்டார் எனக் கருதி அவரை நகருக்கு வெளியே இழுத்துப் போட்டனர். ஆனால் அவரோ மறுநாளே எதைப் பற்றியும் கவலைப்படாமல் உவப்புடனும், மனநிறைவுடனும் பர்னபாவுடன் இணைந்து பணியாற்ற புறப்பட்டுச் சென்றதாக நாம் வாசிக்கின்றோம்.

உடல் பலவீனமோ வலியோ அவருடைய பணி ஆர்வத்தை குறைக்க முடியவில்லை. 2கொரிந்தியர் 9:7இல் வாசிக்கின்றோம் ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும் மனவருத்தத்துடனோ அல்லது, கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். ஆம் கடவுள் நம்மை அன்பு செய்வதை விட அதிகமாக அவரை நாம் ஒருபோதும் அன்பு செய்ய முடியாது. கடவுள் நமக்கு கொடுத்திருக்கின்ற கொடைகளை தாண்டி மேலான கொடைகளை நாம் அவருக்கு கொடுத்து விட முடியாது. எனவே நாம் இருப்பதும் இயங்குவதும் அவராலே தான் என்ற உரிமையை உணர்ந்து தூய பவுல் திருத்தூதர் பணிகள் 20:35இல் அறிவுறுத்துவதுபோல பெற்றுக் கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை. ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூர்ந்து எப்போதும் எல்லாச் சூழ்நிலையிலும் பிலிப்பியர் 2:14இல் வாசிப்பதை போல முணுமுணுக்காமலும் வாதாடாமலும் யாவற்றையும் செய்வோம்.

## நன்றியோடு நினைவு கூர்தல்

ஒவ்வொரு ஆண்டும் நாம் நம்முடைய குருத்துவ அருட்பொழிவு நாளை வார்த்தைப்பாட்டு நினைவு நாளை கொண்டாடுகின்றோம். இதன் மிக முக்கிய நோக்கம் கடந்து வந்த பாதையை நன்றியோடு திரும்பி பார்ப்பது. நாம் துறவற வாழ்வுக்கு அழைக்கப்படுவதற்கு முன் யாராக இருந்தோம்? நம்முடைய வாழ்வின் தரம் எதுவாக இருந்தது? நம்முடைய திறமைகள் ஆற்றல்கள் என்ன? இன்று நான் யாராக இருக்கின்றேன். இன்று என்னுடைய வாழ்வின் தரம் என்ன? நான் அழைக்கப்பட்ட போது இருந்த தூய மனநிலை இன்று என்னிடம் இருக்கின்றதா? உள்ளத்தில் இருந்த ஆர்வம் குறைந்து இருக்கின்றதா? மிகுந்திருக்கின்றதா?

உண்மையிலேயே இறைவனுக்கு என்னுடைய அழைத்தலுக்காக நன்றி செலுத்தக் கூடியவனாக இருக்கின்றேனா? அவரால் அவருடைய அருளால் நாள் வளர்ந்திருக்கின்றேன் என்ற தாழ்ச்சி நம்மிடம் உண்டா? என்பதாகும்.

தூய பவுல் வாழ்வில் நாம் பார்க்கின்றோம். தான் அழைக்கப்பட்டதை அழைக்கப்பெற்ற விதத்தை மீண்டும் மீண்டும் அசை போடுவதை பார்க்கின்றோம். திருத்தூதர் பணிகளில் மூன்று இடங்களில் வாசிக்கின்றோம். அதுமட்டுமல்லாமல் தான் அழைக்கப்பட்ட போது தான் யாராக இருந்தேன் என்பதையும் தன்னை திடப்படுத்தி பணியாற்றச் செய்தது எது என்பதைப் பற்றியும் கொரிந்தியர் 15:9 முதலான வசனங்களில் நாம் வாசிக்கின்றோம். திருஅவையைத் துன்புறுத்தியதால் தான் திருத்தூதர்களில் ஒருவர் என அழைக்கப்பட தகுதியற்றவன் என்றும் தன்னோடு இருக்கும் கடவுளின் அருளே தன்னை ஆர்வத்தோடு உழைக்கச் செய்தது என்பதை ஒத்துக் கொள்வதையும் பார்க்கின்றோம். இவ்வாறு தூய பவுல் தன்னுடைய அழைத்தலை கொண்டாடியதும் தன்னுடைய நிலையை ஏற்றுக் கொண்டதும் தன்னுடைய வளர்ச்சிக்கு காரணம் யார் என்பதை தெரிந்து வைத்திருப்பதும் அவர் தன்னுடைய அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற பெரும் உதவியாக இருந்தது. நாமும் நமது அழைத்தலுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

எனவே தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் 6:4இல் வாசிப்பது போல அனைத்து சூழ்நிலைகளிலும் நாம் கடவுளின் பணியாளர்கள் என்பதை நம்முடைய நடத்தையால் காட்டுவோம். வேதனை, இடர், நெருக்கடி அனைத்தையும் மன உறுதியோடு தாங்குவோம். கொரி 11:33இல் வாசிப்பதை போல அனைத்திலும் அனைவருக்கும் உகந்தவர்களாய் இருப்போம். நமக்கு பயன் தருவதை மட்டும் நாடாமல் பலரும் மீட்படையும்படி அனைவருக்கும் பயன் தருவதையே நாடுவோம்.

தடங்கலுக்கு மகிழ்கின்றோம்

# நில்–நிதானி–முன்னேறு

அருட்பணி - ஜூட் ஜோன்சன்




# மனப்பாங்கு உருவாக்கம்

## Formation of Attitudes

**நிகழ்வு 1:**
ஒரு வகுப்பாசிரியர் தன் மாணவர்களுக்கு வெண்ணிற வெறுமையான காகிதத்தின் நடுவில் ஒரு கறுப்பு புள்ளியிட்டு கொடுத்து அவர்களின் அவதானத்தை வினவினார். மாணவர்களும் தங்கள் வேறுப்பட்ட கருத்துகளையும், ஒன்றுபட்ட கருத்துக்களையும் வெளிப்படுத்தினர். “இக்கறுப்புப் புள்ளி சரியான மையப்புள்ளியில் உள்ளது” என பல மாணவர்கள் குறிப்பிட்டார்கள். “உறுதியாகவும், தெளிவாகவும் தெரிகின்றது” என சில மாணவர்களும், “மையத்தில் இல்லை” என சில மாணவர்களும் குறைகூறினார்கள் எந்தப் பதிலும் ஆசிரியரின் எண்ணக்கருவை வெளிக்கொணரவில்லை. வகுப்பாசிரியர் மாணவர்களிடம் “ஒரு சிறு கறுப்புப் புள்ளி தெரிந்த உங்களுக்கு காகிதம் முழுவதும் இருக்கும் வெண்ணிறப் பரப்பு தெரியவில்லையா? என வினவியபோது மாணவர்கள் சிந்திக்கலானார்கள்.

**நிகழ்வு 2:**
ஒரு வகுப்பாசிரியர் தண்ணீர் நிறைந்த கண்ணாடிக் குவளையை மாணவர்களுக்குக் காட்டி, அக்குவளையில் எந்த அளவிற்கு தண்ணீர் நிறைந்துள்ளது என வினவினார். வகுப்பில் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள் “இக்குவளையில் பாதியளவு தண்ணீர் இல்லை” எனவும், மீதியானவர்கள் பாதியளவிற்கு நீர் நிறைந்துள்ளது” எனவும் பதில் கூறினார்.

மேற்கூறிய இரு நிகழ்வுகளும் பொதுவான ஒரு கருத்தை பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் ஆள், பொருள், சந்தர்ப்பங்கள் போன்றவற்றில் தன் கருத்துகளை வெளிக்கொணரும் வேளை, வேறுபட்டு, மாறுப்பட்ட விதங்களில் செயல்படுகின்றார்கள். தம் தனிப்பட்ட கருத்துகளின் கருவூலங்கள் அவரவர் தனித்தன்மையில் வேறுபடுவதற்கு பல உடல், உள, சமூக, சமய (நம்பிக்கைகள்), பௌதீக காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. எனவே தான் தனி மனித கண்ணோட்டங்களும், தீர்ப்புகளும், தீர்மானங்களும் வேறுபட்டு, செயல்பாடுகளில் மாறுபட்ட தோற்றங்கள் வெளிப்படுகின்றன. இந்த சிக்கலான மனித செயல்பாடுகளில் முதுகெலும்பாக தாங்கி நிற்பது அவரவர் “மனப்பாங்கு” “Attitude” என பல்துறை சார்ந்த ஆய்வாளரும் ஒருமனப்பட்டுள்ளனர்.

சமூகமயமாக்கலில் இளையோரின் பங்களிப்பு வியக்கத்தக்க முறையில் பெரும் பங்கை எதிர்பார்த்திருக்கும் போதிலும், இவர்களில் ஏற்றமுள்ள பங்களிப்பு பெரிதும் விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளன. சமூக பொதுநலன், விழுமிய கோட்பாடுகள், தனிமனித நடத்தை, முதிர்ச்சி, பக்குவம் என நீண்ட எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையே மேலோங்கி நிற்கின்றது. இக்கால இளையோர் தம் தலைமைத்துவ பண்புகளை ஒருபுறம் வெளிப்படுத்தினாலும், கலாசார சீரழிவுக்கு காரணமான வன்முறை அணுகுமுறைகளும், போதைப் பொருட்களின் பயன்பாட்டால் விளையும் சமூக இடர்நிலைகளும், கும்பல் குழப்ப நிலைகளும் எதிர்மறையான தாக்கத்தை படம்பிடித்துக் காட்டுகின்றன. இவ்வாறான சமூக குழப்ப நிலைகளில் சுமூகமான கடமைப் பொறுப்புணர்ந்த தலைமைத்துவத்தை ஏற்கும் இளையோரை எவ்வாறு உருவாக்குவது என்னும் வினாவும், இந்தப் பொறுப்பை சமூகமாக யார் முன்னெடுப்பது என்ற வினாவும் விடையறியாமல் அங்கலாய்த்து நிற்கின்றன. குறைகளை மட்டும் எடுத்துகூறுவதால் சூழ்நிலைகளை மாற்ற இயலாது என்னும் கசப்பான உண்மை உணர்ந்து, நேர்மறை அணுகுமுறைகளை செயல்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். இருளைக்கண்டு விமர்சிப்பதைவிட்டு, ஒரு மெழுகுவர்த்தியை ஒளி ஏற்றி, சுடர்வீச முன்வரவேண்டியது, சமூகம் என்னும் நம் ஒவ்வொருவரின் தலையான கடமையாகும். காலத்தின் கட்டாயமான செயலும் ஆகும்.

இளையோரின் முன்னெடுப்பில் உள்ள தயக்கத்திற்கு “பயம்” “FEAR” ஒரு காரணம் என்னும் ஆய்வை கடந்த கட்டுரையில் விளக்கியிருந்தேன். பொருத்தமான மனப்பாங்கை இளையோரில் உருவாக்கும் முயற்சியாக இந்தக் கருத்துக்களை உங்களுக்கு பதிவுசெய்வதில் மகிழ்கின்றேன்.

பயம் என்னும் பதத்திற்கு ஆங்கிலத்தில் பின்வருமாறு சமூக ஊக்குனர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**FEAR - F- false, E- evidence, A – Appear, R - real** - தவறான சான்றுகள் உண்மையைப் போல தோன்றுதல் - தெளிவில்லாத குழப்பமான சந்தர்ப்பங்களில், தன்னம்பிக்கை இழந்து முன்னேற தயங்கும் எல்லா வித சூழ்நிலைகளுக்கும் இது பொருந்தும். “மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்” என்பது போல தயக்கத்தில் எடுக்கும் எல்லா முடிவுகளும் (தீர்மானங்களும்) தளர்வானதாகவே அமையும். முயற்சிகளும் கைகூடாது. ஈற்றில் தோல்வியே முடிவாகும். சிறு பிள்ளைகளை தீங்குகளிலிருந்து பாதுகாக்கவும் இருளான இடங்களுக்கு தனியாக செல்வதை தவிர்க்கவும், பேய், பசாசு இருக்கின்றது என பொய் (தவறான) தகவல்களால் மனப் பயத்தை உருவாக்குகின்றோம். இப்பயம் வளர்ந்த பின்னும் தொடர்வதை கண்கூடாக காண்கின்றோம். ஒருபுறம் பல சமூக செயல்பாடுகளில் துணிவுடன் செயல்பட விடாமல், இளையோரை கட்டுப்படுத்தும் பெற்றோர், தலைமைத்துவ பண்புகளை ஏற்க பிள்ளைகளுக்கு தகுந்த பயிற்சி அளிக்க தவறிவிடுகிறார்கள். மறுபுறம், எவ்வித பக்குவமான சமூக நன்னடத்தையில் பயிற்சி வழங்காமல், தேர்ந்து தெளியாத நேர் எதிர்மறை கலாச்சாரத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட பின்புலத்தில் வளர்க்கப்படும் பிள்ளைகள் வன்முறையாக செயல்படும் பரிதாப நிலையையும் காண்கின்றோம். இந்தப் பின்னணியில் பின்வரும் இரு வகையான மனப்பாங்கு ஒவ்வொரு தனி மனிதனின் தெரிவாக அமைகின்றது.

FEAR - F- forgetting E-everything A-and R-run
அனைத்தையும் மறந்து ஓடு - இது நேர் எதிர்மறை Pessimistic மனப்பாங்கு.
FEAR - F- forgetting E-everything A-and R-rise
அனைத்தையும் மறந்து எழுந்து நில் - நேர் மறை Optimistic மனப்பாங்கு

நேர் மறை மனப்பாங்கை உருவாக்கும் பணியானது இமயம் தொடும் முயற்சியாகும். கடினமான பணியாக தோன்றினாலும் சாதனைகள் படைப்பதில் வாய்ப்புகள் உள்ளன. தன்னம்பிக்கையுடனும், செயல் திறனுடனும் உழைத்தால் எதுவும் சாத்தியமாகும். ஏனெனில் ஒருவரின் சிந்திக்கும் திறன், உணர்வுகள், நடத்தை என முழு ஆளுமை வளர்ச்சியை சூழ்ந்து ஆழ வேரூன்றி வியாபித்து நிற்கின்றது. பிறப்பில் ஆரம்பித்து மரணம் வரை செல்லும் நீண்ட பயணமாகும். ஒருவரின் கருத்துகள், கண்ணோட்டங்கள், தீர்மானங்கள், அனுமானங்கள் என அனைத்தும் குடும்பம், சமூகம், சமயம், பொருளாதாரம், அரசியல் என இன்னும் பல பௌதீக காரணிகளால் வடிவமைக்கப்படுகின்றன.

# "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது"

தமிழ் மொழிபெயர்ப்பு
அருட்பணி . எமர்சன் றாகல்

நமது உலகில் அமைதிக்கான விருப்பமே முதல் எதிர்நோக்கின் அறிகுறியாக இருக்க வேண்டும். ஏனெனில் இவ் உலகம் மீண்டும் யுத்தத்தின் துயரில் மூழ்கியுள்ளது. கடந்த காலத்தின் பயங்கரங்களை பொருட்படுத்தாமல் மனிதகுலம் இன்னொரு சோதனையை எதிர்கொண்டுள்ளது. ஏராளமான மக்கள் கொடூரம் மற்றும் வன்முறைக்கு இரையாவதை காண்கின்றோம். ஏற்கனவே மிகுந்த துன்பங்களை அனுபவித்த அந்த மக்களின் எதிர்காலம் என்னவாக அமையும்? இவர்கள் துயர்துடைக்க உலகத் தலைவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயங்குவதற்கான காரணம் என்ன? ஆயுதங்கள் செயலிழந்து, அழிவு மற்றும் மரணங்களை நிறுத்துவது கனவாகவே அமைந்து விடுமா? எனவே, மத்தேயு 5:9 இற்கு அமைய "அமைதியை ஏற்படுத்துபவர்கள் இறைவனின் பிள்ளைகள்" என்று அழைக்கப்படுவது போல இவ் யூபிலி ஆண்டில் அமைதியைக் காக்கும் மனிதர்கள் ஊக்கமூட்டப்படுபவர்களாக. அமைதி ஏற்படுத்துவதற்கான தேவை அனைவருக்கும் சவாலாக அமையும் அதேவேளை தெளிவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தையும் ஏற்படுத்துகிறது. அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் தன்னலமற்ற சிந்தனைகளுடனும் மன்னிக்கும் எண்ணத்துடனும் இடம்பெற வேண்டும்.

எதிர்நோக்குடன் எதிர்காலத்தை நோக்கி செல்லும் போது குழந்தைகளை பெற்றெடுத்து வாழ்வை அடுத்த சந்ததிக்கு கடத்தும் உற்சாகத்தை பெறுவோம். ஆனால் தற்போது அத்தகைய சூழ்நிலை அருகிக் கொண்டு இருக்கின்றது. இதனால் ஏற்படுகின்ற முதல் பாதகமான விளைவு வாழ்வை கடத்துவதற்கான ஆர்வமற்ற தன்மையாகும். எதிர்காலம் பற்றிய ஐயம், எதிர்நோக்கு இல்லாத தன்மை, வாழ்வாதாரத்திற்கான வழிகளின் பற்றாக்குறைகள், வெறும் இலாபத்தை நோக்கி செல்லும் சமூக நிலைப்பாடுகள் ஆகியவை பிறப்பு வீதத்தின் குறைவுக்கு காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு சிலர் முறையான விசாரணைகள் இன்றி பிறப்பு வீத அதிகரிப்பினால் உலகம் நிலைகுலைந்துள்ளது என குற்றம் சாட்டவும், நுகர்வு கலாசாரம் அதிகரிப்புக்கு அதுவே பெரும் காரணி என கூறவும் முற்படுகின்றனர். எனவே முறையான தீர்வுகள் எட்டப்பட வேண்டும்.

வாழ்வுக்கு வழிகொடுத்தலும் (Openness to life) மற்றும் பொறுப்பான பெற்றோராக (Pesponsible Parenthood) இருப்பது இறைவன் ஒவ்வொரு ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் பொதித்துவைத்துள்ள ஓர் வடிவமைப்பாகும். திருமணமானவர்கள் மட்டில் அவர்களின் அன்பிற்குக் கடவுள் ஒப்படைத்த ஒரு பணியாகும். புதிய தம்பதியினர் குழந்தை பிறப்பினை தங்களின் அன்யோன்ய அன்பின் கனியாகவும் சமூகத்தின் எதிர்காலம் எனவும் எண்ண வேண்டும். இது எதிர்நோக்கின் விடயம், அது எதிர்நோக்கிலிருந்து பிறக்கிறது அது எதிர்நோக்கை உருவாக்குகிறது.

எனவே கிறிஸ்தவ குழுமங்கள் எம் சமூக கட்டமைப்புக்களை எதிர்நோக்கினை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் எம் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் வாழ வாய்ப்புக்கள் கிட்டும். அதே நேரத்தில், நாம் அனைவரும் வாழ்வின் மகிழ்ச்சியை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும் ஏனெனில் இறைவன் தன் உருவிலும் சாயலிலும் (தொ.நூ 1:26) மனிதனைப் படைத்ததன் நோக்கமும் இதுவே.

இவ் யூபிலி ஆண்டில் துன்புறுகின்ற எம் சகோதர சகோதரிகளுக்கு எதிர்நோக்கின் அடையாளங்களாக நாம் இருக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

**1. சிறைக் கைதிகள்**

தங்கள் சுதந்திரத்தை இழந்த சிறைக் கைதிகள் தினமும் சிறைவாசத்தின் கடினத்தையும் அதன் கட்டுப்பாடுகளையும் அனுபவித்து வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். அவர்கள் அன்பினை அனுபவிக்காமலும் பல வேளைகளில் தகுந்த மரியாதை இன்றியும் இருக்கின்றனர். இந்த யூபிலி ஆண்டில் சிறைக்கைதிகள் தங்கள் எதிர்நோக்கை மீட்டெடுக்க அரசுக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நான் முன்மொழிகின்றேன். அவர்கள் தங்கள் மீதும் சமூகத்தின் மீதும் மீண்டும் எதிர்நோக்கை பெற உதவும் மன்னிப்பும், ஏதுவான நடவடிக்கைகளும் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் மீண்டும் சமூகத்தில் இணைந்து வாழக்கூடிய வழிமுறைகள் சட்டத்திற்கு அமைய உறுதிப்படும் செயல்ப்பாடுகளுடன் இணைந்திருக்க வேண்டும்.

இவ்வகை அழைப்பு இறைவார்த்தையில் இருந்து பிறந்தது. அதன் உள் அர்த்தம் எப்போதும் எக்காலத்திற்கும் பொருத்தமானது. இவ்வார்த்தைகள் புதிய தொடக்கங்களை உருவாக்கும். சகிப்புத்தன்மை மற்றும் விடுதலைக்கான வழிகளை அறிமுகப்படுத்தும். "ஐம்பதாம் ஆண்டைத் தூயதாக்கி நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு - அந்த ஆண்டில் நீங்கள் உங்கள் நிலப்பகுதிக்கும் உங்கள் இனத்தாரிடமும் திரும்ப வேண்டும்." (லேவி. 25:10) மோசேயின் இக்கூற்றை இறைவாக்கினர் எசாயா கூறுவது: "ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும் கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். (எசா 61:1-2) எம் ஆண்டவர் இயேசு தன்னுடைய பணியை தொடங்கும் போதும் "அருள் தரும் ஆண்டு" (லூக் 4:18-19) எனக்கூறியதும் இதனையே. உலகின் ஒவ்வொரு பகுதியிலும், நம்பிக்கையாளரும் அவர்களின் அருள்பணியாளர்களும் சிறையில் உள்ளவர்களுக்கு மதிப்புக்குரிய வாழ்க்கை நிலைகளைப் பாதுகாக்க, அவர்களின் மனித உரிமைகளை மதிக்க வேண்டும். விசேடமாக மரண தண்டனையை நீக்க வேண்டும் என்று ஒன்றிணைந்து வலியுறுத்த வேண்டும். மரண தண்டனை என்பது கிறிஸ்தவ படிப்பினைகளான மன்னிப்பு, மறுவாழ்வு என்பவற்றிக்கு முரணானதாக அமைகின்றது. சிறைக்கைதிகளுக்கு எதிர்நோக்கின் அடையாளமாய் அமைய சிறையில் ஒரு புனித வாயிலை திறக்க விரும்புகிறேன். இது சிறைக்கைதிகளை எதிர்காலத்தை எதிர்நோக்குடன் புதிய நம்பிக்கை உணர்வுடன் நோக்க அழைக்கும் ஒரு அடையாளமாக இருக்கும்.

**2. நோயாளர்**

எதிர்நோக்கின் அறிகுறிகள் வீடுகளிலும் மருத்துவமனையிலும் உள்ள நோயாளிகளிடம் காட்டப்பட வேண்டும். அருகாமையில் அன்பாக இருப்பதினூடாகவும் அவர்கள் துயர் துடைக்க முடியும். இரக்கத்தின் எதிர்நோக்கின் செயல்கள் நன்றியினை தூண்டுகின்றது. இதேபோல், நோயாளர்களை பலவீனமானவர்களை அதிக கவனத்துடன் பராமரிக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கு நன்றிகளையும் தெரிவிக்க வேண்டும். மேலும் தங்களின் பலவீனங்களையும், கட்டுப் பாடுகளையும் சந்திக்கும் நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவரவர் தேவைகளுக்கு ஏற்ப கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பு மனித மாண்புக்கு எடுத்துக்காட்டாகவும் எதிர்நோக்கின் அடையாளமாகவும் திகழ்கின்றது.

**3. இளையோர்**

இளையோரின் கனவுகள் ஆசைகள் சிதைவடைந்து கொண்டு இருக்கின்றன. அவர்கள் எதிர்நோக்கை இழக்காமல் இருக்க வேண்டும். ஏனெனில் எதிர்காலம் அவர்கள் வாழ்வின் உச்சாகத்தில் உள்ளது. அனர்த்தங்கள் நிகழும் போது மக்கள் தேவையில் இருக்கும் போது அவர்கள் தன்னிச்சையாக உதவ முன்வருவது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் எதிர்நோக்கு இல்லாமல் உள்ள இளைஞர்களை காணும்போது வேதனையாக இருக்கிறது. பாடசாலை வாழ்வு முடிந்தவுடன் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கையில் அவர்கள் எதிர்பார்ப்பு அற்றவர்களாய் இருக்கின்றனர். அதனால் மனமுடைந்து சோர்வடைந்து போதைவஸ்து மற்றும் சட்டவிரோதமான செயல்களில் தற்காலிக அற்ப சிற்றின்பங்களை தேடுகின்றனர். எனவே இவ் யூபிலி ஆண்டு அவர்களுக்கு எதிர்நோக்கை கொடுக்கும் முயற்சிகளை திருஅவையாக இணைந்து செயற்படுத்த வேண்டும்.

**4. புலம்பெயர்ந்தவர்கள்**

தம் சொந்து இல்லங்கள், இடம், நாடுகளை விட்டு தங்கள் குடும்பங்களுக்காகவும் தங்களுக்காகவும் நல் வாழ்வைத் தேடி வெளியேறியுள்ள புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிர்நோக்கின் அறிகுறிகள் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் எதிர்பார்ப்பு சீர்குலையக்கூடாது, புறக்கணிக்கப்படக் கூடாது. மற்றய நாடுகளில் அவர்களை வரவேற்கும் எண்ணம் இருக்க வேண்டும். அவர்கள் மனிதத்துவத்துடன் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படலாகாது. அவர்களுக்கு பாதுகாப்பும் வேலை வாய்ப்புக்களும், கல்விகற்க ஏதுவான சூழ்நிலைகளும் கொடுக்கப்பட வேண்டும். கத்தோலிக்க கிறிஸ்தவ சமூகம் இவர்களை வரவேற்பதாக. அவர்கள் எதிர்நோக்கை காத்துக் கொள்ள உங்கள் கதவுகளை நன்கு திறந்து அவர்களை வரவேற்றுங்கள். இயேசுவின் இவ்வார்த்தைகள் உங்கள் இதயங்களில் குடிகொண்டிருப்பனவாக. "ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்... மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25: 35,40)

தொடரும்...

## எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல



# எங்கள் குற்றங்களையும் மன்னியும்

அருட்பணி அ. அ. நவரெத்தினம்,
முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவக் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இயேசு கற்பித்த இறைவேண்டலின் ஐந்தாவது விண்ணப்பமாகிய 'எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்' என்கிற இப்பகுதியானது இரண்டு பகுதிகளாக பிரித்து நோக்கப்பட முடியாதது. பெரும்பாலானோர் இதனை இரண்டு பகுதிகளாக பிரித்து நோக்க முற்பட்டாலும் அங்குள்ள 'போல' என்கிற வார்த்தை அதற்கு இடம் தராது. நாம் கடவுள் அருளுகின்ற மன்னிப்பினை சுவைக்க விரும்பினால், நமக்கெதிராக குற்றம் புரிந்தோரை நாம் மன்னிக்க வேண்டும். இத்தகைய மன்னிப்பின் நிபந்தனையை மீறிப் பயணிக்க முடியாது என்பது யதார்த்தமாகும். இயேசு இச்செபத்தினை கற்றுக்கொடுத்தபோது, அன்பு, இரக்கம் என்கிற கட்டளையிலிருந்து விலகிச் செல்கின்ற நிலையில் இதனைக் கற்றுக்கொடுக்கவில்லை. ஏனென்றால், இரக்கமும், மன்னிப்பும் கிறிஸ்தவ நெறியின் அடிப்படைச் சித்தாந்தங்களாகும்.

இயேசு தன் திருத்தூதர்களுக்கு இச்செபத்தினை கற்பித்த பின்பு, அதிலுள்ள ஒரு முக்கிய விடயத்தினை எந்தவிதமான சந்தேகத்திற்கும் அப்பால், தனிப்பட்ட விதத்தில் மலைப் பொழிவில் விளக்கியுள்ளார். அதாவது: "மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னீப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்" (மத்தேயு 6:14-15). இக்கருத்தினை இயேசு வேறுபல சந்தர்ப்பங்களிலும் கூறியுள்ளார். மத்தேயு நற்செய்தி 18ஆம் பிரிவில், பேதுரு இயேசுவை அணுகி 'ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்திருந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா?' எனக்கேட்டார். அதற்குப் பதிலாக இயேசு 'ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்' என்று பதிலளித்து மன்னிக்க மறுத்த பணியாள் உவமையினை எடுத்துரைக்கின்றார். அவ்வுவமையில், அரசன் பணியாளரின் கடனை மன்னிக்கின்றார், ஆனால் பணியாளர் சக பணியாளரின் கடனை மன்னிக்க மறுக்கின்றார். சக பணியாளருக்கு இரக்கம் காட்ட மறுத்த பணியாளரை கண்டித்து, தான் வழங்கிய மன்னிப்பையும் மீளப்பெற்று, அவனைச் சிறையில் அடைக்கின்றார். இறுதியில் இயேசுவும் 'ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனதார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்' என்கிறார் (காண்க: மத்தேயு 18:21-35).

இப்போதனையின் முக்கியமான சொல்லாகிய 'போல' என்கிற வார்த்தை கிரேக்கத்தில் *'hos'* என்று அழைக்கப்படுகிறது. இச்சொல்லானது ஒரே நேரத்தில் 'நிபந்தனை'யையும் (condition), மறுபக்கத்தில் 'ஒப்பிடு' (comparision) ஆகியவற்றையும் குறித்து நிற்கிறது. இறைவன் நம்மை மன்னிக்கின்ற நிலையானது நாம் மற்றவர்களை மன்னிக்கின்ற 'நிபந்தனை' மற்றும் 'அளவிலும்' தங்கியுள்ளது. மன்னிக்கின்ற மனப்பாங்கானது முழுமையாக நம்மிலிருந்து உருவாவது கிடையாது, மாறாக, அது, எமது வாழ்வில் கடவுள் வழங்கும் மன்னிப்பின் விளைவாகும். கடவுள் நம்மோடு செயலாற்றுகின்றபோது, அவர் நமது வாழ்வில் காட்டிய இரக்கத்தினை நாம் அடுத்தவர்களுக்கு காண்பிக்கச் செய்கிறார். இந்த முக்கியமான கருத்தினை நாம் நன்கு அறிந்துகொள்ள ஹேர்மன் வெட்ஜேன் (Herman Vaetjen) என்கிற அறிஞர் நமக்கு உதவுகின்றார். அவரின் கருத்துப்படி…

"இறைவேண்டல் என்பதனால் புரிந்து கொள்ளப்படுவது யாதெனில்… இறைவனால் அவருக்கு ஏற்புடையவர்களாக உருவாக்கப்பட்டவர்கள், அவரது குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்கள் தங்களது தெய்வீகப் பெற்றோரைப் போன்று நடந்து, இறைவனுடைய மகனாக, மகளாக வாழ வேண்டும். இயேசு தம்முடைய திருத்தூதர்கள் இத்தகைய மனப்பாங்கு உடையவர்களாக வாழ வேண்டுமென்பதை பின்வரும் இறைவார்த்தை -களினூடாக அழைப்பு விடுக்கின்றார். 'உங்கள் விண்ணகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்' (மத்தேயு 5:48), அவ்வாறே, 'உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள்'" (லூக்கா 6:36).

எனவே, நாம் அனைவரும் மன்னிக்க வேண்டியவர்கள். மன்னிப்பு எவற்றையெல்லாம் உள்ளடக்குகின்றது? அது எத்தகைய நிபந்தனைகளில் வழங்கப்பட வேண்டும்? மத்தேயு நற்செய்தியில் (6:9-13) 'பாவம்' என்கிற சொல்லுக்கு பதிலாக 'கடன்' (Refer: New Revised Standard Version of the Bible) என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அது மன்னிப்பு என்பது வெறுமனே கடன்களை மன்னித்தல் என்கிற கருப்பொருளினுள் சுருக்கப்பட வேண்டுமென்பதற்காக அல்ல, மாறாக, அவரது நோக்கத்தினை விளக்குவதற் -காகத்தான் அவ்வாறு இடப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா நற்செய்தியாளர் (11:2-4) 'பாவம்' என்கிற சொல்லினையே பயன்படுத்துகின்றார், அதுவே உண்மையான பொருளுமாகும். அதாவது, ஒருவர் தன் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதபோது கடனளிக்கும் ஒருவர் அதனை மன்னிப்பதுபோல், நமக்கு எதிராகச் செய்த பாவங்களை மன்னிக்க வேண்டும். (ஆயினும் தமிழ் பொது மொழிபெயர்ப்பு விவிலியத்தில் இரண்டு நற்செய்திகளிலும் 'குற்றம்' என்கிற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது).

அப்படியென்றால், நமக்குள் எழுகின்ற அடுத்த கேள்வி, பாவம் என்றால் என்ன? பாவம் என்பது இறைவனின் பரிசுத்தத்தை குறைவாகக் காண்பிக்கின்ற எந்தவொரு நடத்தையும். சிந்தனையும் அது பாவமாகும். பெருமை, சுயநலம், கருணையற்ற தன்மை, பொய் பேசுதல், விபசாரம், அகம்பாவம், கொடுஞ் செயல், வெறுப்பு, கொலை இவை போன்ற அனைத்துமே பாவங்களாகும். இவைபோன்ற செயற்பாடுகள் இன்றைய பொழுதுபோக்கு செயற்பாடுகளிலும், மற்றும் நாளாந்த வாழ்விலும் காணப்படுவதனை நோக்கலாம். நம்மில் இவற்றில் ஏதாவது ஒன்றினை நமது சிந்தனையாலும், செயல்களாலும் நாளாந்தம் புரிந்து கொண்டே இருக்கின்றோம். பவுல் அடிகள் உரோமையருக்கு எழுதிய மடலில்: 'ஏனெனில், எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்.' என்பார்.

தொடரும்…

# புனிதர்களின் பாதையில்



## புனித பியோ

தென் இத்தாலியில் போர்ஜியொன், மரிய க்யுசெப்பா டி நுன்ஸியோ தம்பதியரின் மகனாக பிரான்செஸ்கோ போர்ஜியொவில் 1887 ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்தார். சிறு வயது முதலே பக்தியில் சிறந்து விளங்கிய இவர் கடவுளுக்கு மிகவும் நெருக்கமானவராக வாழ்ந்து வந்தார். இளம் வயதிலேயே இவர் விண்ணக காட்சிகளைக் கண்டார். 1903 ஜனவரி 6 தனது 15 ஆம் வயதில் கப்புச்சின் சபையில் புகுநிலை துறவியாக இணைந்தார். ஜனவரி 22 ஆம் திகதி தனது துறவற ஆடைகளைப் பெற்றுக்கொண்டு பியட்ரல்சினோவின் பாதுகாவலரான புனித ஐந்தாம் பயசின் பெயரைத் தனது துறவற பெயராக (பியோ) சூட்டிக்கொண்டார்.

ஏழு ஆண்டுகள் குருத்துவக் கல்வியின் பின்னர் 1910 ஆம் ஆண்டு பியோ குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். 1917 ஆம் ஆண்டு இவர் முதலாம் உலகப் போரில் காயம் அடைந்த வீரர்களுக்கு சேவை செய்ய அனுப்பப்பட்டார். இவர் உடல் நலமின்றி துன்புற்ற வேளைகளில் இயேசுவின் திருப்பாடுகளை அதிகமாக தியானம் செய்தார். இயேசு கிறிஸ்துவின் வேதனைகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்திலும் உலக மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் பியோ தனது வேதனைகளை இயேசு நாதருக்கு ஒப்புக்கொடுத்தார். மக்களை கடவுளுக்கு நெருக்கமானவர்களாக மாற்ற பெரிதும் முயற்சி செய்தார்.

1918 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி பியோ அவர்கள் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது உடலில் இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் கிடைத்தன. அவற்றிலிருந்து சிந்திய இரத்தம் இனிமையான நறுமணம் வீசியது. அன்று முதல் இவர் இறக்கும் நாள் வரை இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரத்தில் அனுபவித்த வேதனைகளை பியோ இந்த காயங்களால் தனது வாழ்வில் அனுபவித்தார். இந்த திருக்காயங்கள் சில மருத்துவர்களால் ஆராயப்பட்டு இவரது புனிதத்தன்மைக்கு கிடைத்த பரிசு என்ற சான்று வழங்கப்பட்டது.

கிறிஸ்தவ தியானத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட பியோ, “புத்தகங்கள் வழியாக கடவுளைத் தேடும் ஒருவர், தியானத்தின் வழியாக அவரைக் கண்டுகொள்ள முடியும் என்று குறிப்பிடுவார். 1960 இல் பியோவின் உடல்நலம் குன்றத் தொடங்கியபோதும், இவர் தொடர்ந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டார். 1968 செப்டம்பர் 23 ஆம் நாள், செபமாலையைக் கையில் பிடித்தவாறும், “இயேசு, மரியா என்ற திருப்பெயர்களை உச்சரித்தவாறு தனது 81வது வயதில் மரணம் அடைந்தார். திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவருக்கு 1999 ஆம் ஆண்டு அருளாளர் பட்டமும், 2002 யூன் 16 ஆம் நாள் புனிதர் பட்டமும் வழங்கினார். இவர் இறந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகு, 2008 மார்ச் 3 ஆம் திகதி இவரது கல்லறைத் தோண்டப்பட்டபோது கண்டெடுக்கப்பட்ட பியோவின் அழியாத உடல், சான் ஜியோவானி ரொட்டொன்டே அருகிலுள்ள புனித பியோ ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

---

# பிரச்சனையில்லா வாழ்க்கை ஏது?

**மாணவர் தீபம்**



**மடல் – 08**

**ஜோ. நோமன் பல்தசார், ஓய்வு நிலை அதிபர்**

**அன்பு மாணவரே, வாசக நெஞ்சங்களே,**

**கள்ளிச் செடியை கிள்ளும் போது**
**காம்பிலிருந்து வடியும் பால் மீண்டும்**
**காம்பிற்குள் புகுந்து விடாது**
**கடைந்தெடுத்த எண்ணெய் மீண்டும்**
**மோராகாது.**
**உடைந்த சங்கில் மீண்டும் ஓசையும்**
**உயிரும் உட்புகாது**
**வேரடியில் விழும் பூ மீண்டும்**
**மரத்தில் ஏறாது.**

இப்படியாக இயற்கை இருக்கும் போது மாணவர்கள் மட்டும் எப்படி இழந்த நேரத்தை மீண்டும் பெற முடியும். நீ நேரத்தை வீணடிப்பதாக உன்னை கற்பிக்கும் ஆசிரியரும், உனது பெற்றோரும் உன்னைத் திட்டியதை நான் அறிவேன். நீ நேரத்தை வீணடித்தால் எதிர்வரும் பரீட்சையில் எப்படி வெற்றி காண்பாய்.

நேரத்தை வீணடிக்கிறேனா? அப்படி நான் என்ன செய்தேன். என்று சிந்திக்கிறாயா? ஆசிரியர் கற்பிக்கும் போது அதில் கவனம் செலுத்தாது அருகில் உள்ளவருடன் கதைத்துக் கொண்டு இருப்பது, எத்தனை நாட்கள் பாடசாலை செல்லாமல் காலத்தை வீணடித்து இருக்கின்றாய். சிந்தித்துப் பார் இவையெல்லாம் காலத்தை வீணடிக்கும் சந்தர்ப்பங்கள் அல்லவா.

ஒன்பது பாடங்களை படிக்கும் உங்களுக்கு 2026ஆம் ஆண்டிலிருந்து 7 பாடங்களை படித்தால் போதும் என அரசாங்கம் அனுமதித்து இருப்பது ஏன் என்று தெரியும் தானே. தற்போது ஒன்பது பாடங்களை படிக்கும் போது அதைப் படிக்க நேரம் போதாது சிரமப்பட்டு படிக்கிறீர்கள். நிம்மதியாக படிக்க வேண்டும் என இவ்வாறு மாற்றியுள்ளனர். அதிகாலை 4.00 மணிக்கே டியூசன் வகுப்பிற்கு நீங்கள் செல்வதாக மேன்மைமிகு ஜனாதிபதி அவர்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் பேசி உள்ளார்?

டியூசன் வகுப்புகள் தான் உங்கள் நேரத்தை பாழடிக்கின்றதா? டியூசன் ஒரு பிரச்சனையாகவும் காணப்படுகின்றது. அது பற்றி பின்னர் எழுத இருக்கின்றேன். இப்போது நீ என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுகிறேன் படித்துப் பார். திருமலைத்தீபம் பத்திரிகை கத்தோலிக்க சமயம் சார்ந்ததாக இருப்பதனால் எல்லா மாணவரும் வாசிக்க மாட்டார்கள் என்பதை அறிவேன்.

கல்வி கற்கும் மாணவர்களாகிய நீங்கள் என்ன படிக்க வேண்டும். எதிர்காலத்தில் நீங்கள் எப்படி வரவேண்டும் என்பதையிட்டு ஆண்டவரிடம் அர்ப்பணிப்பு அடைதல் வேண்டும். அர்ப்பணிப்பு என்பது உமது கல்வி நிலையும் உமது எதிர்காலமும் சிறப்பாக அமைய கடவுளிடம் அடிமையாக மாறுவது. இறைவனிடம் உம்மை அடிமையாக்குவது ஒன்றும் கேவலமான விடயம் அல்ல. “முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு, உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்துச் செய். அப்பொழுது அவர் உன் பாதையைச் செம்மையாக்குவார்.”(நீதி மொழிகள் 3:5-6)

இனி இதைவிட உனக்கு என்ன வேண்டும். உடனடியாக இயேசுவிடம் அர்ப்பணிப்பாகு உன் தேவைகள் நிறைவேறும்.

**வாழ்க வளத்துடன்.**

# திருத்தூதர் பணிகள் 21 – 24 அதிகாரங்கள்

- **எல்லோரும் பங்குபற்றலாம்**
- **போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது**
- **அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.**

**பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=**

**சரி, பிழை எழுதுக.**

1. சிலைகளுக்கு படைக்கப்பட்டவை, இரத்தம், கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவை மற்றும் பரத்தமை ஆகியன தவிர்க்கப்பட வேண்டும். ( )

2. சதுசேயர்ப் பிரிவினர் வானதூதரும், உயிர்த்தெழுதல், ஆவிகள் ஆகியன உண்டென கூறிவந்தனர். ( )

3. உரோமையர்கள் பவுலைக் கொல்லும் வரை உண்ணவோ குடிக்கவோ மாட்டோம் எனத் தங்களிடையே சூளுரைத்துக் கொண்டனர். ( )

4. பவுலுக்கெதிராக ஆளுநரிடம் தலைமைக் குருவான அனனியாவும் சில மூப்பர்களும் வந்து முறையிட்டனர். ( )

5. பெலிக்சு யூதரது நல்லெண்ணத்தைப் பெற பவுலை விடுவித்து சென்றார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

6. பவுலின் ____________ எடுத்து தம் ____________ கால்களையும் கட்டிக் கொண்டு இந்த ____________ எருசலேமில் ____________ இவ்வாறு கட்டிப் பிற இனத்தாரிடம் ஒப்புவிப்பார்கள்.

7. நீங்கள் ____________ ஏன் என் உள்ளத்தையும் ____________ நான் ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக எருசலேமில் ____________ மட்டுமல்ல ____________ தயார்.

8. நான் ஒரு ____________ ____________ தர்சு நகரில் பிறந்தவன். ஆனால் இந்த ____________ நகரில் ____________

9. ____________ பற்றி மிகத் திட்டவட்டமாக அறிந்திருந்த ____________ ஆயிரத்தவர் ____________ லீசியா வரும் போது உங்களை ____________

10. ____________ அவரே ____________ உம்மை அடிப்பார். ____________ எனக்கு தீர்ப்பளிக்க அமர்ந்திருக்கும் நீர் அச்சட்டத்திற்கு ____________ என்னை அடிக்க ஆணை பிறப்பிக்கலாம்?

**யாரால் யாருக்கு கூறப்பட்டது என எழுதுக.**

11. நான் உம்மோடு பேசலாமா?

____________

12. சகோதரரே சவுலே மீண்டும் பார்வையடையும்.

____________

13.சகோதரரே நான் இந்நாள்வரை கடவுள் முன்னிலையில் என் மனச்சான்றுக்கிசைய முற்றிலும் நேர்மையாக வாழ்ந்து வந்தேன்.

____________

14. நாங்கள் பவுலைக் கொல்லும் வரை எதுவும் உண்ண மாட்டோம் என்று ஆணையிட்டு சூளுரைத்துள்ளோம்.

____________

15. ஆயிரத்தவர் தலைவரான லீசியா வரும் போது உங்களை விசாரிப்பேன்.

____________

பெயர் :............................................................

முகவரி :............................................................

தரம் :............................................................

பங்கு :............................................................

*முடிவுத்திகதி 2025.10.31*

# திருவிவிலிய புதிர் போட்டி – 65 எசாயா 48 – 51 அதிகாரங்கள்

- **எல்லோரும் பங்குபற்றலாம்**

1. என் கட்டளைக்குச் செவிசாய்த்திருப்பாயானால் உன் இது இதைப்போலும் உன் வெற்றி இதைப் போலும் பாய்ந்து வந்திருக்கும்?

விடை:............................................................

2. நீ இந்தக் குணமுடையவன். உன் கழுத்து இது போன்றது. உன் நெற்றி இது போன்றது இதை நான் அறிவேன்?

விடை:............................................................

3. நீ ஏமாற்றுப் பேர்வழி கருப்பையிலிருந்தே இவன் என்று பெயர் பெற்றவன்?

விடை:............................................................

4. உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை இவர்களுக்கு இப்படியாகவும் ஏற்படுத்துவேன்.

விடை:............................................................

5. தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன். இந்த நாளில் உமக்கு இப்படியாக இருந்தேன்.

விடை:............................................................

6. நீ அவர்கள் அனைவரையும் இதைப்போல் அணிந்து கொள்வாய் இவர் அணிவதுபோல் அணிந்து கொள்வாய் என்கிறார் ஆண்டவர்.

விடை:............................................................

7. உங்கள் தீச் செயல்களை முன்னிட்டே நீங்கள் இப்படியானீர்கள். உங்கள் வன்செயல்களின் பொருட்டே உங்கள் இவர் இப்படியானாள்?

விடை:............................................................

8. அடிப்போருக்கு என் இதனையும், தாடியைப் பிடுங்குவோருக்கு என் இதனையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோருக்கும் இதனைச் செய்வோருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.

விடை:............................................................

9. நீ முகங்குப்புற விழுந்து கிட என் உன்னிடம் சொன்னார்களே. உன் முதுகை அவர்கள் இதுவாகவும், கடந்து செல்வோருக்கு இதுவாகவும் மாற்றினார்களே.

விடை:............................................................

10. இது அவர்களை இதுவெனத் தின்றழிக்கும் இது அவர்களை இதுவென அரித்தொழிக்கும்.

விடை:............................................................

## பாராட்டுப் பெறுவோர் (எசாயா 40 – 43, புதிர் போட்டி 63)

1. நோ. பினோன் - புனித லூர்து அன்னை ஆலயம் பாலையூற்று
2. C. மெடோனா குயின் - புனித லூர்து அன்னை ஆலயம் பாலையூற்று
3. ஷெனோரா ஸ்பெக் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
4. ஜெருஸன் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
5. ரெனோறியஸ் ராகல் - புனித வனத்து அந்தோனியார் ஆலயம்
6. றெமில்டன் ராகல் - புனித வனத்து அந்தோனியார் ஆலயம்
7. மா. எபினேஸ் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
8. நெவில்ராஜ் டனித் ஷரோன் - புனித வனத்து அந்தோனியார் ஆலயம்
9. ஜெஸ்டின் மரியஹாஷின் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
10. அ. டனிஷாதேவதிஷான் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று

பெயர் :............................................................

முகவரி :............................................................

தரம் :............................................................

பங்கு :............................................................

*முடிவுத்திகதி 2025.10.31*

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் – 01



படம் – 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
  1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :......................................................

முகவரி :......................................................

தரம் :......................................................

பங்கு :......................................................

முடிவுத்திகதி 2025.10.31

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் - 47

### நீதிமொழிகள் அதிகாரம் 19 - 21 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ன் | கொ | டை | யா | ள | ரு | க் | கு | அ |
| ன் | வ | ம் | இ | ர் | ரு | மா | ர் | ஞா | ளி |
| ம | றை | கு | க | வா | தி | ச | வா | ன | க் |
| தி | இ | ற் | ழ் | மு | த் | ற் | ழ் | மு | கு |
| ப் | கு | நி | வா | வி | ழி | ற | வா | ள் | ம் |
| பை | மி | து | ரு | றி | வி | வ | து | ள | கொ |
| த் | தி | த் | க் | ட | ண் | ரா | த் | வ | டை |
| த | நீ | லை | கு | இ | க | ய் | டி | னா | |
| ரு | | நி | பி | ற | ழா | மை | நீ | ய் | |
| ம் | ளை | க | ளை | ட | ட் | க | க் | ரு | தி |

1 ஆம் பரிசு 700/= ருபா
திவாஜினி ஜோன் விஜானி குருஸ்
64ஆம் கட்டை
முதூர்
புனித சதாசகாய அன்னை ஆலயம்.



2 ஆம் பரிசு 500/= ருபா
கே. ஷத்விக்கா
பொற்கேணி,
தம்பலகமம்
புனித பாத்திமா அன்னை ஆலயம்.



3 ஆம் பரிசு 300/= ருபா
இ.ஜெ. ரெச்சல்
இல. 38/10, 4ஆம் வட்டாரம்
சாம்பல்தீவு
புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்.

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ருபா
டெ. ஆன்சிரா
இல. 08, பூம்புகார் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.

2 ஆம் பரிசு 500/= ருபா
C. தேஜஸ்
இல. 33, நாகம்மாள் வீதி,
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.





3 ஆம் பரிசு 300/= ருபா
A. ஷேஷஷா
இல. 11/11A, புனித ஜீட் லேன்
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்

## திருத்தூதர் பணிகள் அதிகாரங்கள் 13 – 16

1 ஆம் பரிசு 700/= ருபா
நோ. சு. பினோன்
இல. 70/10, வேளாங்கன்னி வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்



2 ஆம் பரிசு 500/= ருபா
ரு. ஜெருஸன்
இல. 29/2, நாகம்மாள் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.



3 ஆம் பரிசு 300/= ருபா
K. நிலுக்ஷிகா
இல. 58, வேளாங்கன்னி வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்

## திருவிவிலிய புதிர் போட்டி முடிவுகள் – 63
## எசாயா 40 – 43 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 700/= ருபா
R. சிறியானி
6ஆம் கட்டை
சகாயபுரம், முதூர்
சதாசகாய அன்னை ஆலயம்



2 ஆம் பரிசு 500/= ருபா
F.R.F ரோஷித்
இல. 51, சிவன் வீதி
திருகோணமலை



3 ஆம் பரிசு 300/= ருபா
R. டிலுக்ஸ்ராஜ்
இல. 48, நித்தியபுரி
செல்வநாயகபுரம்
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்.

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

10.05.2025 அன்று க.பொ.த உயர்தர பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கான ஆயத்த கருத்தமர்வானது மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆசிரியை திருமதி. சுரேந்தினி மணிவண்ணன் அவர்களால் நடாத்தப்பட்டது.



மறைமாவட்ட ரீதியிலான திருவிவிலிய அறிவுப் போட்டியானது 07.06.2025 அன்று புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது. இப்பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.



தேசிய ரீதியிலான திருவிவிலிய அறிவுப் போட்டியானது 05.07.2025 அன்று புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது. இப்பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வானது 14ஆம், 15ஆம் திகதிகளில் றாகம தேவத்தை தியான இல்லத்தில் நடைபெற்றது.



திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களால் புனித மரியாள் பேராலயத்தில் 31.05.2025 அன்று லூர்து அன்னையின் கெபி திறந்து வைக்கப்பட்டது.



## துயர் பகிர்கிறோம்

பிறப்பு – 1929.09.27 பிறப்பு – 1936.11.15



இறப்பு – 2025.02.22 இறப்பு – 2024.05.06

**அமரர். திரு. யுவான் லூயிஸ்பிள்ளை**

**அமரர். திருமதி. தோமாஸ் ஜேட்றுட் அம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை)**

தகவல் – ஜெயராணி, அமலராணி